**<u>2026 ஏப்ரல் மாதம் 09– ஆம் தேதி வியாழக்கிழமை</u>**

**<u>கூடுதல் மாவட்ட விரைவு நீதிமன்றம், தேனி</u>**

**<u>S.C. நெம்பர் : 136/2025</u>**

2026–ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 09– ஆம் தேதி வியாழக்கிழமை திருமதி.L.சுபத்ரா, கிரேடு I பெஞ்ச் கிளர்க் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர்: | PW11 (LW9)– மஞ்சுளா |
| கணவர் பெயர்: | தேவேந்திரன் |
| ஊர்: | மாரியம்மன்கோவில்பட்டி |
| வட்டம்: | போடிநாயக்கனூர் |
| மாவட்டம்: | தேனி |
| தொழில்: | காய்கறி வியாபாரம் |
| வயது : | 51 |

09.04.2026

(1 முதல் 5 மற்றும் 7 முதல் 9 எதிரிகள் ஆஜர். 6 வது எதிரி ஆஜர் இல்லை. எதிரிகளின் வழக்கறிஞரும் ஆஜர். பிரிவு 355 BNSS –ன்படி மனுத்தாக்கல் செய்யப்பட்டு, மனு அனுமதிக்கப்பட்டது).

(சாட்சி அழைக்கப்பட்டு சம்பந்தப்பட்ட போலீசாரால் அவரது ஆதார் அடையாள அட்டை மூலம் அடையாளம் காணப்பட்டு ஒப்பீடு செய்யப்பட்டு பின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் அளிக்கிறார்)

**முதல் விசாரணை:–**

நான் தற்சமயம் தேனி மாவட்டம், போடிநாயக்கனூர் தாலுகா, மாரியம்மன்கோவில்பட்டியில் வசித்து வருகிறேன். நான் காய்கறி வியாபாரம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியாது. இவ்வழக்கில் இறந்துபோன பால்பாண்டி என்பவர் எப்படி இறந்தார் என்ற விபரம் குறித்து எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**<u>சாட்சி அரசு தரப்பில் பிறழ்சாட்சியாக கருதப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டு, அரசு தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

கடந்த 08.03.2015ம் தேதி 03.30 மணியளவில் பால்பாண்டி என்பவர் குடியிருந்த வீட்டில் விவசாயத்திற்கு பயன்படுத்தும் பூச்சிக்கொல்லி மருந்தை அருந்திவிட்டதாகவும், தேனி, க.விலக்கு அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவந்ததாகவும், பின்னர் சிகிச்சை பலனின்றி மாலை 3.30 மணிக்கு இறந்துவிட்டதாகவும், ஆஜர் எதிரிகளிடம் பணம் கொடுக்கல் வாங்கல் சம்பந்தமாக வட்டி பணத்தை கேட்டு தொந்தரவு செய்ததால் பால்பாண்டி என்பவர் மருந்தை குடித்து தற்கொலை செய்ததாக போலீசார் விசாரணையில் சொல்லிவிட்டு, தற்போது எதிரிகளை காப்பாற்றுவதற்காக அரசு தரப்பிற்கு எதிராக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>** :- இல்லை

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் இன்று 09.04.2026 அன்று வியாழக்கிழமை சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

G SREE DEVI
Digitally signed by G SREE DEVI
Date: 2026.04.09 18:10:27 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி, தேனி.
09.04.2026